1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் பயிற்சி தொழில் பாடங்களைப் பொறுத்தமட்டில் நாம் மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்பியிருக்கிறோம். அதற்காக ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம். அந்தக் குழுவிடம் இந்த யோசனையைச் சொல்லி, இதைப் பரிசீலிக்க சொல்கின்றோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 242, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

242—

முகாசி அனுமன் பள்ளியில் நூலகம் அமைத்தல்.

* 11758—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா----

மொடக்குறிச்சி தொகுதி, முகாசி அனுமன் பள்ளியில் நூலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி முகாசி அனுமன் பள்ளிக்கிராமத்தில் மொத்த மக்கள் தொகை 3857 ஆக இருப்பதால் தற்போதுள்ள விதிமுறைகளின்படி தற்போது இங்கு கிளை நூலகம் திறக்க வாய்ப்பில்லை. இருப்பினும் பகுதி நேர நூலகங்கள் திறப்பதற்கான நிபந்தனைகளை ஊர்ப்பொது மக்கள் அல்லது உள்ளாட்சி நிறுவனத்தார் நிறைவேற்றி தரும் பட்சத்தில் இங்கு ஒரு பகுதி நேர நூலகம் திறக்க வாய்ப்பு உள்ளது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தொட்டனைத்து ஊறும் மணர்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு'' என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் மொடக்குறிச்சி தொகுதியைப் பொறுத்தவரையில் பாமர மக்களும், பள்ளி சென்று படிக்க இயலாதவர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கிற காரணத்தினால்

எப்படியாவது பொது நூலகங்களிலேயாவது சென்று கல்விச் செல்வத்தைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் ஆர்வமாக செயல்பட்டு வருகிற காரணத்தினால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொன்னதைப்போல பகுதி நேர நூலகத்தையாவது எப்பொழுதிலிருந்து செயல்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பார் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான நிபந்தனைகள், 5 முதல் 10 சென்ட் வரையான காலிமனை பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும். இரண்டு, பகுதி நேர நூலகம் செயல்படுவதற்கு ஏற்றவாறு வாடகை இல்லாத உறுதியான கட்டிடம் வழங்கப்பட வேண்டும். மூன்று, இரண்டாயிரம் அல்லது இரண்டாயிரம் மதிப்புள்ள நூலக தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும். நான்கு, குறைந்தது 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து மனு கொடுப்பார்களேயானால் பகுதிநேர நூலகத்தைத் திறப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை.

முற்பகல் 10-05

திருமதி கவிநிலவு தர்மராஜ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை 300 உறுப்பினர்களைச் சேர்த்துள்ளதோடு, அரசுக்குச் சொந்தமாக நிலத்தைக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறோம். மேலும் அமைச்சரவர்கள் கூறிய விதிமுறைகளுக்கு ஏற்ப, அவற்றைச் செயல்படுத்துவதற்கேற்ப அத்தனை ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்கிறோம். எனவே எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றல்படைத்த இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான அரசிலே, விரைவிலே எங்கள் பகுதிக்கு நூலகம் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான உத்தரவை உடனடியாகப் பிறப்பிப்பார்கள் என்ற நம்பிக்கையிலே, அந்தப் பகுதி நேர நூலகத்தை அனுமன் பள்ளியிலே மையத்திலே வைத்து, அது ஒரு கிளை நூலகம்போல் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பத்திரம், மற்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கையிலே வைத்துள்ள

1993 ஏப்ரல் 6]

ஆவணங்கள் அனைத்தையும் நம்முடைய மாவட்ட நூலக அலுவலகத்தில் தந்து விடுவார்களானால் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நூலகம் திறப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதற்கு இதுபோன்ற நூலகங்கள் மிகவும் அவசியமாக இருப்பதால், தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும், குறிப்பாக நூலகம் இல்லாத ஊர்களில் நூலகம் திறப்பதற்கும், பல ஊர்களில் திறக்கப்பட்ட நூலகங்களுக்குக் கட்டிட வசதி சரியாக இல்லாததால் மிகவும் துன்ப நிலைக்கு ஆளாகியிருப்பதால் அங்கே உடனடியாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா ஊர்களிலும் நூல் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற உணர்வும் கொள்கையும் உடைய அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு. ஆனால் அதற்கு இடைஞ்சலாக இருப்பது நிதிப் பற்றாக்குறைதான். ஆகவே நிதிநிலைக்கு ஏற்பதான் எதையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே கேட்டிருப்பதைப் போல, புதிய கட்டிடங்கள் கட்டுவது என்ற திட்டத்தையே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேதான் துவக்கினோம். இப்போது பல்வேறு ஊர்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட ஊர்களில் அவர்கள் இடத்தைத் தேர்ந்தெடுத்து, தனியாருடைய அல்லது அரசுக்குச் சொந்தமான நிலத்தைத் தருவார்களானால் அங்கே கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் அவர்கள் ஊர் பொது மக்கள் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் அரசின் சார்பாக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வாசகசாலைகள் பல ஊராட்சி மன்றங்களிலே கட்டி முடிக்கப்பட்டு, அது வெறுமனே கிடக்கிறது. அந்த

[1993 ஏப்ரல் 6

வாசகசாலைக்காகக் கட்டப்பட்டுள்ள இடத்தில் நூலகத்தைத் திறப்பதற்கு அரசிடம் நிதிநிலைமை இல்லாவிட்டாலும், ஊராட்சி மன்ற உதவியாளர்கள் கண்காணிப்பிலே நூல்களை மட்டும் அந்த வாசகசாலைக்குத் தந்து, அந்தக் கிராமப்பகுதி மக்கள் அறிவாற்றலைப் பெறுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாவட்ட நூலக அலுவலரிடம் விவாதித்து, தக்க முடிவை எடுக்குமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் எழுதிய 'பாரதி கண்ட புதுமைப் பெண்' என்ற புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பற்றியது அது. அதைத் தமிழகத்தில் உள்ள அனைத்து நூலகங்களிலும் வைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அதுமட்டுமின்றி, கடந்த வாரம் கலைவாணர் அரங்கில் வெளியிடப்பட்ட "புரட்சித் தலைவியின் கொள்கை முழக்கங்கள்" என்ற ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தையும் அனைத்து நூலகங்களிலும் வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே வெளியிடப்படுகிற புத்தகங்களை நிச்சயமாக நூலகத்தில் வைப்பார்கள். இதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. தனிப்பட்ட முறையிலே போடப்பட்டிருக்கிற புத்தகங்களைப் பொறுத்தவரையில், அந்தப் புத்தகத்தையும் ஒரு விண்ணப்பத்தையும் தருவார்களானால், அதற்கு விலை நிர்ணயம் செய்து, அதற்குப் பிறகு அவர்கள் வாங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 243, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: